1972 ஆகஸ்ட் 23]

திரு. எம். இராதாகிருட்டிணன் : தலைவர் அவர்களே. செங்கம் வட்டத்தில் எந்தக் கிராமத்தில், எந்த ஊரில் அது இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : செங்கம் வட்டத்தில் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, எந்த ஊர், எந்த வட்டம் என்பதை முழு விவரத்தைக் காண்கிறபோது அறியலாம்.

திரு. நா. வீராசாமி : செங்கம் வட்டத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் தேவ பாஷையில் எழுதப்பட்டு இருப்பதாகவும், அதிலே புதையல் அங்கே இருப்பதுபற்றிச் சொல்லப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்களா ? புதையல் ஏதாவது அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். கல்வெட்டுக்களிலே சில செய்திகளைத்தான் அறிந்திருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டுக்களின்கீழே பிணம்தான் இருப்பதாகத் தெரிகிறதேதவிர பணம் இருப்பதாகத் தெரியவில்லை.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய உயர்வுகள்

** 273 வினா—**திரு. கே. எ. வகாப் :*** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில், புலவர், பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றும் மேற்படி பட்டங்களைப் பெறுபவர்களுக்கு, அவர்கள் வயதினைக் கணக்கிடாமல் முதலிடம் வழங்கி ஆசிரியராக நியமனம்செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொடக்கப் பள்ளிகளில் பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் புலவர் மற்றும் பி.ஏ., பி.டி. பட்டங்கள் பெறுவாராயின். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர், பி.டி. அல்லது உதவி ஆசிரியர் பதவிகளுக்கு

விண்ணபிக்க வசதி செய்யும் வகையில் அதற்கான வயது வரம்பினை அப்படிப்பட்டவர்களுக்கு 40 வரை உயர்த்தலாம் என்ற செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

Teacher-pupil ratio

* 274 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether there is any proposal to reduce the teacher-pupil ratio in the elementary schools of this State; and

(a) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) முன்பு இருந்ததைவிட இப்பொழுது விகிதாச்சாரம் கணிசமாகக் குறைந்துள்ளது.

(ஆ) மேலும் குறைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் விதம் நியமனம் செய்வதின் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தவும் அதிகப்படியான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியும் என்று ஆலோசனை கூறியிருக் கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சராசரி விகிதம் 1 : 35 அதாவது ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற அளவிலேதான் இருக்கிறது. அந்த எண்ணிக்கையை மேலும் குறைக்கலாம். அப்படி நினைக்கிறபோது நிதி வசதி தடையாக இருக்கிறது. அதிகமாக நிதி வசதி இருந்தால் அப்படிச் செய்யலாம். அல்லது பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமைக்குப் போகவேண்டும், அப்படிச் செய்தால் 1 : 20 என்ற நிலைமைக்கு விகிதம் வருமானால் மாணவர்களின் சேர்க்கை அளவு தடைப்படும். எனவே பொருளாதார நிலைமை, கல்வியறிவின்மை, இவற்றைக் கணக்கிலேகொண்டுதான் முன்பு